**தேசிய வீதி வலையமைப்பு செயற்திட்டத்தின் நிலச்சரிவு இடர் பாதுகாப்பு செயற்திட்டம் - 2013**

---

தேசிய வீதி வலையமைப்பு செயற்திட்டத்தின் நிலச்சரிவு இடர் பாதுகாப்பு செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவருக்கும் (ஜேஜசிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆம் திகதிய எஸ்எல் - பி 109 ஆம் கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு தற்போது நெடுஞ்சாலைகள், உயர்கல்வி நடவடிக்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைப்பு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) முறையே நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களின் உயர் நிலப் பகுதிகளில் முறையான நிலச்சரிவு இடர்களைக் குறைக்கும் எதிர் விளைவு அமுலாக்குவதன் மூலம் இலக்குடன் A வகுப்பு தேசிய வீதி அடிப்படை உட்கட்டமைப்பு பிணை அமுலாக்கல் காரணமாக பொருளியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கும் பங்களிப்பு மற்றும் வீதிவலையமைப்பு பாதுகாப்பு மற்றும் பாவனை மற்றும் வதிவிடம் என்பவற்றை உள்ளடக்கிய மகிழ்ச்சியான மக்கள் வாழ்க்கை செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் தொடர்ந்து கிடைக்கப் பெறக் கூடிய வேலைகள்

(i) வீதி இடர் முகாமைத்துவ மாதிரிக்கான எதிர்விளைவுகள்

(ii) தேசிய வீதிகள் நில உயர் இடர் முகாமைத்துவ மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட வசதிகளுக்காக முன்னுரிமை பகுதிகளுக்கான எதிர்விளைவுகள்.

(iii) இடர் முகாமைத்துவத்திற்கான முன் கூட்டியே எச்சரிக்கை முறைமை ஸ்தாபித்தல்

(iv) ஆலோசனை சேவைகளை வழங்கல்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 14,754, மில்லியனானதுடன் மற்றும் அதில் ரூபா 11,423 க்குச் சமனான 7,619 மில்லியன் ஜென் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2019 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களை தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்கள் என்போரின் செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்களிற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும், ஆகும்.

**3. அபிப்பிரயாம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களில் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கேற்ப 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவு ரூபா 12,000,838 ஆகும். மீளாய்வு காலத்திற்கான செலவினத்தின் பொழிப்பைப் பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலத்திற்கான செலவினம் ரூபா |
|---|---|
| நிலையான சொத்துக்கள் | 3,025,957 |
| நடைபெறும் வேலை | 8,950,206 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 24,675 |
| மொத்தம் | 12,000,838 |

### 4.2 கட்டு நிதிக் கணக்கு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் கட்டு நிதிக் கணக்கு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் 842 மற்றும் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் ஐஏஜ/2002/02 இன் பிரகாரம், செயற்திட்டத்தால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடு, மற்றும் மீளாய்வு காலப்பகுதியின் போதான செயற்திட்டம் நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை என்பன தொடர்பான முக்கிய புள்ளி விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வு காலப் பகுதியின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | யப்பான் ஜென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் | 7,619 | 11,423 | 500 | - | - |
| இலங்கை அரசாங்கம் | - | 3,331 | 100 | 10.8 | 10.8 |
| மொத்தம் | 7,619 | 14,754 | 600 | 10.8 | 10.8 |

* செலுத்த வேண்டியவை தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையில் இருந்து இத் தொகை வேறுபடுகின்றது.

**6.2 பௌதீக செயலாற்றல்**

2013 மார்ச் 14 இல் இலங்கை சனநாயகக் குடியரசிற்கும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவருக்கும் இடையில் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2012 ஒக்டோபரிலிருந்து செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.